26

வடு

வகுப்புக்குள் நுழைந்து, முதல் பெஞ்சில், முனையில் உட்கார்ந்து கொண்டான் கிருஷ்ணமூர்த்தி. மாணவர்கள் யாரும் வந்திருக்கவில்லை. கல்லூரி தொடங்கிய முதல் நாள் அது என்ப தோடு, கிருஷ்ணமூர்த்தியின் கல்லூரி வாழ்க்கைக்கும் அது முதல் நாளாய் இருந்தது. மனம் அந்தப் புதிய வாழ்க்கையின் புதுமைகளை எதிர்பார்த்துப் பரபரத்தது.

அடுத்த சில நிமிஷங்களுக்குள் அவள் வந்து, கிருஷ்ணமூர்த்தி அமர்ந்திருந்த பெஞ்சுக்குப் பக்கத்துப் பெஞ்சில் அமர்ந்தாள். அறையைச் சுற்றி நோட்டம் விட்டாள். நான்கு ஜன்னல்களோடு கூடிய விசாலமான அறை அது. இடப் பக்கத்து ஜன்னல்கள் வெட்டாற்றை நோக்கி அமைந்திருக்கும். இருந்த இடத்திலிருந்தே கலங்கிய பழுப்பு நிற ஆற்று நீரைப் பார்க்க முடியும். படித்துறைகளில் துணி தப்பும் ஓசைகளைக் கேட்க முடியும். ஈரம் முகந்த காற்று இடையறாது வீசிக் கொண்டிருக்கும். அறைக்குள் மூன்று சாரியாகப் பெஞ்சுகள் போட்டிருந்தார்கள். இரண்டிரண்டு பேர் அமரும் பெஞ்சுகள். வகுப்பைப் பார்த்து முடித்த அவள் பார்வை அவனிடம் வந்து நிலைத்தது.

சின்னதாய்ச் சிரித்துக் கொண்டே 'ஹலோ' என்றாள் அவள்.

திடுக்கிட்டுத் திரும்பினான் அவன்; அது புதிய அனுபவம். இந்த வயதுடைய பெண்களோடு அவன் பேசியது இல்லை. அக்காவோ தங்கைகளோ இல்லாத தனியனாகப் பிறந்து வளர்ந்த வன். அதனாலேயே பெண்களுடன் பேசுவது என்பது கூச்சமான, தப்பான, ஒழுக்கம் இல்லாத காரியமாய் இருந்து வந்துள்ளது அவனுக்கு. அத்தோடு, 'பெண்களோடு பேசினால் பழகினால் காது அறுந்துவிடும்' என்று பாட்டி சொல்லி வைத்திருந்தாளே. மேலும்

“சாமி வேறு கண்ணைக் குத்தும். சாமி தூங்கும் போது வந்து அந்தக் காரியத்தைச் செய்யுமாமே...’ பாட்டியின் வார்த்தைகள், அவனுக்குப் பெண்கள் மேல் அதிகம் கவர்ச்சியை ஏற்படுத்தின.

மிரண்டு போய், ‘ஹலோ’ என்றான்.

மீண்டும் அதே சிரிப்பு. மனநிறைவை வெளிக்காட்டும் சிரிப்பு. சினேகிதத்தை வரவேற்கிற சிரிப்பு. மேல் ஆறு பற்கள் தெரிய அவள் சொன்னாள், ‘நான் செண்பக ராஜலட்சுமி...’

‘நான் கிருஷ்ணமூர்த்தி...’

அந்த நிமிஷம்தான் அவனுக்குள் அவள் வந்து புகுந்து கொண்ட நிமிஷமாக இருக்கும். அவளுடைய மான் நிறம். சற்றுப் பெரிய கண்கள். வலது கண்ணில் விழிக்குப் பக்கம் குட்டியாய் ஒரு மச்சம். உடம்பில் உஷ்ணம் ஏற்படுத்துகிற உதடுகள். ஆகாய நிறத்தில் சேலையும் அதனுடன் இயைந்த பிளவ்சும், உபயோகித்திருந்த பவுடரின் மணமும் லேசாகக் கமழ்ந்து அவனைக் கிளர்ச்சியுறச் செய்திருந்தது.

மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து வகுப்பை நிறைத்துக் கொண்டிருந்தார்கள். திடீரென்று, இதுவரை இருந்த கூச்சம் அவனிடமிருந்து விலகிப் போய்விட்டது போல இருந்தது.

கைக்குள் சுருட்டி வைத்திருந்த கைக்குட்டையைச் செண்பகா மேசை மேல் வைத்தாள். புதிதாக நாலைந்து பெண்கள். ஒருத்தி செண்பகா பக்கத்தில் வந்து அமர்ந்தாள். அவளுடன் பேசத் தொடங்கிவிட்டாள் செண்பகா. சின்னஞ் சிறு சிறிய கைக்குட்டை ஒரு சிட்டுக்குருவி வந்து மேஜையில் அமர்ந்தது போல இருந்தது. பெண்களுக்கென்றே உருவாக்கப்பட்டது. பெண்களுக்கு என்றால் கைக்குட்டை செய்பவன் கூடக் கவிஞனாகி, சின்னஞ்சிறுசாய், உள்ளங்கை அகலத்தில், பூவும் வண்ணமுமாய்க் கைக்குட்டைகள் தயார் செய்கிறான். ஆண்களுக்கு என்று வந்து விட்டால், ஓர் அலட்சிய பாவம் அவனுக்கு ஏற்பட்டுவிடும் போலும். ஒரு துண்டை இரண்டாக வெட்டி கைக்குட்டை என்பான்.

முதல் நாள் என்பதால் அன்று மதியத்தோடு கல்லூரி முடிந்தது. போகும்போது மறக்காமல் ‘வர்றேன்’ என்று சொல்லி விட்டுப் போனாள் செண்பகா. அதற்குள் அவளுக்குத் தோழிகள் கிடைத்து விட்டிருந்தார்கள். சினேகத்தை யாசிக்கிற அவள் சிரிப்பு, பெண்களையும் ஈர்க்கத்தானே செய்யும். கிருஷ்ணமூர்த்திக்கு நெருப்பாய் வந்து இறங்குகிற வெயில், உறைக்கவில்லை.

உலகமே ரம்மியமாய் இருந்தது. இதுதான் காதல் போலும் என்று தோன்றியது. காதலின் சந்தோஷமே தான் காதலிக்கிறோம் என்பதிலா? இல்லை. தான் ஒருத்தியால் நேசிக்கப்படுகிறோம் என்பதில்தானே! ரோட்டோர வாய்க்காலுக்குப் பக்கத்தில் முளைத்திருந்த புற்களும் மிக அழகாய்த் தோன்றின. முன்னே செண்பகாவும் தோழிகளும் போய்க் கொண்டிருந்தார்கள். செண்பகாவே தலைவி. அவள் கையை அசைத்து அசைத்து என்னமோ பேச மற்றவர்கள் அதற்குச் சிரித்துச் செவி சாய்த்துக் கொண்டிருந்தார்கள்.

பெண்கள் விடுதியைக் கடந்துதான் அவன் அறைக்குப் போக வேண்டும். கீழும், மாடியிலும் கம்பி அழிபோட்ட பெரிய வீடே விடுதியாக இருந்தது பெண்களுக்கு. கேட்டைத் திறந்து கொண்டு உள்நுழைந்தவள் திரும்பிப் பார்த்தாள். கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து மீண்டும் அதே சின்னச் சிரிப்பைத் தூக்கிப் போட்டு விட்டுப் போனாள்.

கல்லூரி வாழ்க்கை மிகச் சந்தோஷமாக, சௌகர்யமாக இருப்பதாகத் தன் அப்பாவுக்குக் கடிதம் எழுதினான் அவன்.

ஜாமெட்ரி பெட்டி அளவில் ஒரு பை வைத்திருப்பாள் செண்பகா. சில்லறைகள். கைக்குட்டை, எல்லாம் அதில் வைத்திருப்பாள். மதிய வகுப்புக்கு வருபவள், வந்தவுடன் சப்தம் எழாமல் பாக்குப் பொட்டலத்தைப் பிரிப்பாள். அது ஒரு பழக்கம் அவளுக்கு. கிருஷ்ணமூர்த்தியின் உஷார்க் காதுகளுக்கு அந்த மொரமொரச் சப்தம் வந்து விழும். பெஞ்சின் கீழ் வாட்டத்தில் கையைநீட்டுவான் கிருஷ்ணமூர்த்தி. இரண்டு துண்டுப் பாக்குகள் உள்ளங்கையில் விழும், சமயங்களில் பொட்டலத்தில் உள்ளது எல்லாம் கொட்டி விடும். உடனே பாதியை அவன் கையிலிருந்தே அவள் எடுத்துக் கொள்வதும் அல்லாமல் அவன் புறங்கையில் நறுக்கெனக் கிள்ளி விடுவதும் உண்டு. பெண்கள் கிள்ளினால் வலிக்காது.

"ஞாயிற்றுக்கிழமை மேட்னிக்குப் போறமே..." என்பாள் செண்பகா, ஒரு சின்னக் குழந்தையின் குதூகலத்துடன்.

"யார் யார்?"

"நான், மல்லிகா, ஹம்சவல்லி...'

"என்னைச் சேத்துக்கக் கூடாதா...?"

"ஓய் நாட்... வாங்களேன்..."

போவான்.

பனிரெண்டு மணிக்குள் குளித்து ஒரு மணிக்குள் தயாராகி விடுவான். பக்கத்தில் இருந்த அந்தத் தியேட்டருக்கு ஒன்றரை மணிக்குள் வந்துவிடுவான். செண்பகா கோஷ்டி மூணு அடிக்கும் போது சாவகாசமாகப் பேசிக் கொண்டே வந்து சேரும். இந்தப் பெண்களே இப்படித்தான் — ஆண் பிள்ளைகளைக் காத்திருக்கச் செய்வதில் அவர்களுக்கு ஒரே குரூர திருப்தி.

பெரிய கோயில் நந்திக்கு எதிரே அமர்ந்திருந்தார்கள். புதர் புதராய் இருட்டு. செண்பகா சொன்னாள், "அப்பா ரொம்பக் கண்டிப்பு. நான் படிச்சு உத்தியோகம் பார்க்கணும்'னு உயிரை வைத்துக் கொண்டிருக்கிறார். அம்மா எல்லா அம்மாவையும் போலத்தான். ரெண்டு தங்கைகள். ஒருத்திக்குப் பாட்டு ரொம்பப் பிடிக்கும். ஒருத்திக்கு சினிமா உயிர்."

செண்பகா நெஞ்சில் உள்ளவற்றையெல்லாம் இறக்கி வைக்கிற பெண். ஆயினும் அவளை அவனால் புரிந்துகொள்ள முடிய வில்லை. சமயங்களில் கிருஷ்ணமூர்த்தி பிந்தி வகுப்பு வருவான். அவன் இடத்தில் தங்கவேலு உட்கார்ந்திருப்பான். அவனை ஏனோ கிருஷ்ணமூர்த்திக்குப் பிடிக்காமல் போய்விட்டது. அவனுக்கும் மத்தியானம் பாக்கு கொடுக்கிறாளே செண்பகம்? தங்கவேலு கிண்டல்கார மனிதன்; சிரிக்கச் சிரிக்கப் பேசுவான்; கொஞ்சம் அசட்டுத்தனம், கொஞ்சம் பெண் பிள்ளைத்தனம். உதவுவது, சளசளவென்று பேசுவது ஆகியவை பெண்களுக்கு மிகவும் பிடிக்கும் போலும். செண்பகா யாருடனாவது பேசினால் கிருஷ்ணமூர்த்தி வயிறு எரிந்து போகிறான். காதலோடு பொறாமையும் பிறந்து விடுமா என்ன,

"மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி... லீவில் ஊருக்குப் போறீங் கல்லையா?" என்றாள் செண்பகா.

கிருஷ்ணமூர்த்திக்கு இந்த விடுமுறை எல்லாம் ஏன் என்று இருந்தது.

"ஆமா... போய்த்தான் ஆகணும்... நீங்க போறீங்கதானே..."

"கட்டாயம். நீங்களும் விழுப்புரம் வரைக்கும் என்னோட வரலாம். உங்களுக்கு ஒரு பிரண்டை நான் அறிமுகப்படுத்தறேன். அப்புறம் அப்படியே நான் உளுந்தூர்ப் பேட்டைக்கும், நீங்கள் பாண்டிச்சேரிக்கும் போயிடலாம்."

கசக்குமா என்ன? அதுவும் முதல் பயணம். பஸ்ஸில் பக்கத்தில் பக்கத்தில் அமர்ந்தே பயணம் செய்தார்கள். பாதை குண்டும் குழியுமாய் இருந்தது. வண்டி குலுங்கியது. பலமுறை இருவரும் இடித்துக் கொள்ளத் திருவள்ளுவர் மூலம் அரசே உதவி செய்கிறாற் போல் அவனுக்குத் தோன்றியது. ரோட்டுக் காவல்காரர்களாய் மரங்கள் நின்றிருந்தன.

விழுப்புரத்தில் கிருஷ்ணமூர்த்திக்கு ஓர் ஆச்சரியம் காத்தி ருந்தது. செண்பகாவுக்காகக் காத்திருந்த ராஜனை அவள் அவனுக்கு அறிமுகப்படுத்தினாள்.

"மிஸ்டர் ராஜன்... இவர்தான் என் பிரண்ட், கிளாஸ்மேட் மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி."

"ஓ... உங்களைத் தெரிந்து கொண்டதில் ரொம்ப மகிழ்ச்சி. செண்பகா எல்லா கடிதத்திலும் உங்களைப் பற்றி எழுதியிருக்கிறாள்" என்று ராஜ் சொன்னான் சரளமான ஆங்கிலத்தில்.

முதல் பார்வையிலேயே ராஜ் அவனுக்குப் பிடிக்காமல் போய் விட்டான். கிருஷ்ணமூர்த்தியைக் காட்டிலும் அவன் உயரமாக, நிறமாக, அழகாக, இளமைப் பொலிவோடு, 'ஏய்... இவள் என்னுடையவள்டா...' என்று சொல்லாமல் சொல்லிக் கொண்டு நின்றான். சட்டென்று ஓர் இருள் மனசுக்குள் வந்து உட்கார்ந்து கொண்டது போல் உணர்ந்தான் கிருஷ்ணமூர்த்தி. ஒரு காதல் மெழுகுவர்த்தியால் மட்டுமே போகக் கூடிய இருள்.

"ஏதேனும் சாப்பிடலாம் வாருங்கள்" என்றான் ராஜ். அவர்கள் இருவரும் முன் நடக்கப் பின்னால் நடந்து போனான்.

அவள் பையையும் அவன் தோளில் மாட்டியிருந்தான் கிருஷ்ணமூர்த்தி. வெட்கம், வேதனை, கூச்சம் எல்லாம் மீண்டும் அவனை வந்து பற்றிக் கொண்டது போல் அவன் உணர்ந்தான். ஒரு ரெண்டு மூன்று மேசை நாற்காலிகளும், லட்சக்கணக்கான கொசுக்களும் இருந்த ஒரு ஹோட்டலில் அவர்கள் காபி சாப்பிட்டார்கள். செண்பகாவும் ராஜும் அருகருகே இருக்க, எதிர்ப்புறத்தில் கிருஷ்ணமூர்த்தி. யுகம்யுகமாக அவர்கள் பேசுகிறார் போல அவனுக்குப்பட்டது. உடன் அவளை விட்டு ஓட வேண்டும் போலவும் இருந்தது.

"சரி... நான்... கிளம்பறேன்..." என்றான்.

"ஓ... சாரி... நீங்க என்கூட வந்ததை மறந்தே போயிட்டேன் கிருஷ்ணமூர்த்தி... நீங்க புறப்படுங்க... தேங்க்யூ எ லாட், கடிதம்

எழுதுங்க; காலேஜ்ல மீட் பண்ணுவோம்…" என்றாள் செண்பகா… ராஜ் கைகுலுக்கி விடை கொடுத்தான்.

பாண்டிச்சேரி பஸ் கிடைக்க ஒரு மணி ஆயிற்று. அது வரைக்கும் கூடச் செண்பகா பஸ் நிலையத்துக்கு வரவில்லை. அங்கிருந்து தான் அவள் உளுந்தூர்ப்பேட்டைக்குப் போக வேண்டும். இருட்டி விட்டது. வானத்தில் நட்சத்திரங்கள் வீணே கொட்டிக் கிடந்தன.

கிருஷ்ணமூர்த்தியின் எண்ணத்தை உறுதிப்படுத்துவது மாதிரி செண்பகாவே கடிதம் எழுதி இருந்தாள் அதில் ராஜைத்தான் அவள் திருமணம் செய்துகொள்ளப் போவதாகக் குறிப்பிட்டிருந்தாள். இருவரும் ஒரே ஊர்க்காரர்கள்.

ஏமாற்றப்பட்டுவிட்ட உணர்வு அவனுக்கு ஏற்பட்டிருந்தது. அவள்மீது கோபம் கோபமாய் வந்தது. பெண்களே ஏமாற்றுக் காரிகள் என்றுகூட நினைத்தான். அதன் எதிரொலியாகக் கல்லூரி மீண்டும் தொடங்கிய முதல் நாள் முதல் பெஞ்சில் உட்காரமல் கடைசி பெஞ்சுக்குப் போனான். செண்பகம் ஒரு கணம் அவனைத் தேடி ஏமாந்து, திரும்பி அவனைப் பார்த்து வாய்க்குள்ளேயே ஹலோ சொல்லி, அதே சிரிப்பொன்றை உதிர்த்துத் தன் இடத்தில் உட்கார்ந்த போது, அவனுக்குத் திருப்தியாக இருந்தது.

"என்ன அண்ணாச்சி, ஊடலா?" என்றான் தங்கவேலு. யாரையும் அண்ணாச்சி என்றுதான் அழைப்பான் தங்கவேலு. யாரிடமாவது கொட்ட வேண்டும் என்று இருந்த கிருஷ்ணமூர்த்திக்கு வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது. கொட்டியது. தங்கவேலு சொன்னான்.

"ரொம்ப சின்ன விஷயம் அண்ணாச்சி. அந்தப் பொண்ணை நீங்கதான் காதலிச்சிருக்கீங்க… அது ஒரு சிநேகிதியா மட்டும்தான் உங்ககிட்டே இருந்திருக்குது… நீங்கதான் தப்புப் பண்ணியிருக்கீங்க. காதலுக்கும் சினேகிதத்துக்கும் நமக்கு வித்தியாசம் தெரியறது இல்லே. ஒரு மயிரிழைதான் ரெண்டுத்துக்கும் வித்தியாசம் அண்ணாச்சி. நீங்க ரொம்ப நல்லவர். ஆனா இந்த விஷயங்கள்ளே அநுபவம் இல்லாதவரு… அதனால்தான் கோபம் வருது உங்களுக்கு… போகப் போகப் பாருங்க… ரொம்ப ஷாக்கிங் நியூஸ் எல்லாம் உங்களுக்கு வரும்…"

தங்கவேலு சொல்வது உண்மை என்று கிருஷ்ணமூர்த்திக்கு விளங்கத்தான் செய்தது. எனினும் அவனுக்குக் கோபமும்,

நிராசையும், ஏமாற்றப்பட்டு விட்டோம் என்கிற ஆதங்கம் மனசில் அடித்தட்டில் இருக்கவே செய்தன. கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தி ருந்தான் என்றால் அவனது கோபத்தின் ஊற்றுப் பிறந்த இடத்தை அவனால் கண்டுபிடித்திருக்க முடியும். தான் நேசிக்கப்படவில்லை, தான் எதிர்பார்க்கிற விதமாக என்பதே அதன் நிஜக் காரணம்.

தங்கவேலு சொன்னது பலிக்கவே செய்தது. அடுத்த மூன்று மாதங்களில் ஏகப்பட்ட சம்பவங்கள் நிகழவே செய்தன.

செண்பகா பளீரென்று மிக அழகாகத் தென்பட்டாள். உடம்பு கொஞ்சம் பூசினாற் போலாகி விட்டது. கன்னத்தில் செம்மை கூடியது. ஒரு களைப்பும் சோர்வும் நிழலாக அவள் முகத்தில் படிந்தன. கிளர்ச்சி ஊட்டிய அந்த அழகுக்கு வேறு காரணம் இருந்ததை அவன் கண்டு பிடிக்கவில்லை. வார்டன் கண்டு பிடித்தான். கல்லூரி நிர்வாகம் அவளை வெளியேற்றிவிட்டது.

மாதங்கள் பலவாகியும், அந்த லட்சக்கணக்கான ஈக்கள் இன விருத்தியாகிக் கோடியாகிப் பல்கிப் போன அதே ஹோட்டலில் அந்த மூன்று பேரும் இருந்து காபி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

ராஜ் சொன்னான்: "இதில பயப்படறதுக்கோ, வருத்தப் படறதுக்கோ ஒன்றுமில்லை மிஸ்டர் கிருஷ்ணமூர்த்தி. கொஞ்சம் அவசரப்பட்டுட்டோம். முன் யோசனை இல்லாமே இருந்துட்டோம். இதைத் தவிர்த்திருக்கலாம். நீ வீட்டுக்குப் போ செண்பகா. நான் இன்னும் ரெண்டு மூன்று நாளைக்குள்ளே உங்க அப்பாவை வந்து பாக்கறேன்."

செண்பகா ஒரேயடியாக ஆடிப்போய் விடவில்லை. சமாளித்துக் கொண்டு ஏற்றுக் கொண்டுவிட்டாள். அது கிருஷ்ண மூர்த்திக்கு ஏமாற்றமாக இருந்தது. அவள் அழுது ஆர்ப்பாட்டம் செய்வாள் என்றும், 'நான் என்ன பண்ணுவேன்...' என்று ராஜ் சொல்வான் என்றும், கிருஷ்ணமூர்த்தி எதிர்பார்த்திருந்தான்.

"வீட்டில் ஏதேனும் சிக்கல்'னா உடனே புறப்பட்டு இங்க வந்துடு செண்பகா. என் சம்பாத்யம் நம்ம ரெண்டு பேருக்கும் போதும். கல்யாணம் பண்ணிக்கலாம்" என்றான் ராஜ்.

செண்பகா நிம்மதியடைந்தவளாய் இருந்தாள். வார்டனின் கோபம், பிரின்ஸிபலின் அதிர்ச்சி குறித்தெல்லாம் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தாள்.

செண்பகாவைப் பஸ்ஸில் ஏற்றி அனுப்பி வைத்தார்கள். பஸ் புறப்பட்டவுடன்தான் அவள் கலங்குவது தெரிந்தது. 'கவலைப் படாதே...' என்று தேற்றினான் ராஜ்.

அப்பா ரொம்பக் கோபக்காரர் என்று சொல்லி இருந்தாளே செண்பகம். அவர் முரட்டுத்தனமாக நடந்து கொள்ளப் போகிறார். அம்மா வயிற்றில் அடித்துக் கொண்டு அழுவாள். தங்கைகள் மூலைக்கொருவராக நின்று கொண்டு பிழியப் பிழிய அழுவார்கள். 'போடி வெளியே' என்று அவள் அப்பா நிச்சயம் சொல்வார். அவ்வாறுதான் நடக்கப் போகிறது. நடக்க வேண்டும் என்று எதிர்பார்த்தான் கிருண்மூர்த்தி.

அப்படியெல்லாம் நடக்கவில்லை என்று ராஜே சொன்னான். தை மாசத்தில் கல்யாணம் வைத்திருப்பதாகச் சொன்னான்.

⮝ ⮟ ⮝

பல மாதங்களுக்குப் பிறகு தங்கவேலுவும் கிருஷ்ணமூர்த்தியும் வெட்டாற்றங்கரைப் படிக்கட்டில் அமர்ந்து பழைய ஞாபகங்களைக் கிளறிக் கொண்டிருந்தார்கள். கிருஷ்ணமூர்த்தி சொன்னான்.

"காதல் நிறைவேறல்லைன்னு நான் வருத்தப்படலை தங்கவேலு. செண்பகாவுக்குக் கர்ப்பம் தரிச்சு, காலேஜை விட்டுப் போற நிலைமையெல்லாம் ஏற்பட்டுச்சே அதுக்காக அல்லவா நான் வருத்தப்பட்டிருக்கணும். உண்மையான சினேகிதன்னா, அவங்க ரெண்டு பேரையும் எப்படிச் சேத்து வைக்கலாம்'னு அல்லவா நான் யோசிச்சு இருக்கணும்? எப்படா ராஜ் கழண்டுக்குவான், எப்படா அவ அப்பா அவளை வீட்டைவிட்டுத் துரத்துவார், அதுதான் சமயமின்னு நான் அவளை என் பக்கம் இழுத்துக்கலாம்'னு நினைச்சேன் பாரு... அந்தக் கயவாளித்தனத்தை நினைச்சாத்தான் மனசு ஆற மாட்டேங்குது..."

"கவலைப்படாதீங்க அண்ணாச்சி... நாமளும் மனுஷங்க தானே... நீங்க மட்டும்தான் அப்படி நினைச்சீங்களா?... நானும் தான்... இப்போ அவ நல்லா இருக்கா. அப்படியே என்னைக்கும் இருக் கணும்'னு நான் வேண்டிக்கிறேன்..." என்றான் தங்கவேலு.

1985